**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.**
**O.S.No.85/2020**

2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 01ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879ம் ஆண்டின் 10 வது சட்ட விதிகளின் படி திருமதி. சரஸ்வதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாந்தி | தொழில் | : | |
| கணவர் பெயர் | : | அண்ணாமலை | கிராமம் | : | |
| வயது | : | 42 | வட்டம் | : | காஞ்சிபுரம் |

**பி.வா.சா.2 முதல் விசாரணை**

1. நான் இந்த வழக்கின் பிரதிவாதி அனுப்பிய அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது ஸ்ரீபெரும்புதூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் சார் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள நீ.ம.சா.ஆ.3, 18.04.2023 அன்று நான் கொடுத்த ஆய்வறிக்கை ஆகும். அதில் உடன் இணைக்கப்பட்டுள்ள கிராம நத்தம் புல வரைபடத்தை நான் தான் எனது அறிக்கையுடன் கொடுத்தேன். அது போலவே அதனுடன் இணைக்கப்பட்டுள்ள நத்தம் நில வரைபட அடங்கல் பதிவேட்டையும் நான் தான் எனது அறிக்கையுடன் கொடுத்தேன். சர்வே எண் 191/32 என்ற சொத்து உட்பிரிவு செய்யப்படாமல் முழு புலமாக தான் உள்ளது.

2. எனது அறிக்கையுடன் நான் தாக்கல் செய்துள்ள அடங்கல் வசந்தி, ஏகாம்பரம், மகேந்திரன் என்பவர்கள் பெயரில் சர்வே எண் 191/32 உள்ளது. அந்த ஆவணத்தில் உள்ள குறிப்புகளின் படி 07.02.2020 அன்று RPT NO.55 படி செல்வராஜின் பெயர் நீக்கப்பட்டு அதற்கு பதில் வசந்தியின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் சி.மகேந்திரனின் பெயர் எதன் அடிப்படையில் சேர்க்கப்பட்டது என்ற குறிப்பு காணப்படவில்லை. சர்வே எண் 191/32ன் மொத்த விஸ்தீரனம் 230 சதுர மீட்டர். மேற்படி அடங்கல் பதிவேடு

எப்போதில் இருந்து பராமரிக்கப்படுகிறது என்றால் 1990ல் இருந்து 1992ற்குள் நடந்த நத்தம் நில வரி திட்ட அளவீடு படி மேற்படி அடங்கல் பராமரிக்கப்படுகிறது.

3. சாட்சியிடம் மனை வரி பட்டா எண் 781 அசல் காண்பிக்கப்பட்டது. சாட்சி மேற்படி பட்டாவானது 30.09.1995 அன்று வழங்கப்பட்ட மனை வரி தோராய பட்டா என்று ஒப்புக் கொண்டதன் அடிப்படையில் மேற்படி பட்டா **பி.வா.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த ஆவணத்தின் படி பட்டாவானது செல்வராஜ் மற்றும் ஏகாம்பரம் பெயரில் உள்ளது. அதன் விஸ்தீரனம் 230 சதுர மீட்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தின் படி சர்வே எண் 191/32 பிரிடாத முழு புலமாக தான் காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி புல எண் 191/32ற்கு தெருவானது தெற்கு பக்கத்தில் அமைந்துள்ளது. எனது அறிக்கையில் நான் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு பகுதி என்பது ஆணையரின் உத்தரவுப்படி சர்வே எண் 191/33யை அளந்தோம் கிராம கணக்குப்படி அது பொது வழி ஆகும்,. அந்த பொது வழியானது 14.6 மீட்டர் அளவுக்கு பொது வழியாகவும் அதற்கு வட புறத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதாகவும் நான் குறிப்பிட்டுள்ளேன். எனது அறிக்கையில் நான் குறிப்பிட்டுள்ளது மேற்படி விவரத்தை தான் . ஆக்கிரமிப்பு பகுதியின் நீள, அகலத்தை எனது அறிக்கையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை.

4. நான் ஆய்வு செய்த இடம் தற்போது எனக்கு ஓரளவிற்கு ஞாபகத்தில் உள்ளது. சாட்சியிடம் பி.வா.சா.ஆ–1 புகைப்படம் காண்பிக்கப்பட்டது. அது நான் ஆய்வு செய்த இடமா என்றால் தற்போது எனக்கு சரியாக தெரியவில்லை. சாட்சி தனது ஆட்சேபனையுடன் தாக்கல் செய்த புகைப்படம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. அவரால் ஒப்புக் கொள்ளப்பட்ட புகைப்படம் **பி.வா.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி புகைப்படத்தில் உள்ள கேட்டின் வழியாக பின் பக்கம் வரை சென்று பார்த்தேன். பின்புறத்தில் காலிமனையும், மரம், செடி, கொடிகளும் இருந்தது.

**இத்துடன் முதல் விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை**

பி.வா.சா.ஆ.2 பட்டாவின் படி தாவா சொத்து கிராம நத்தம் ஆகும். கிராம நத்தம் பட்டா கொடுக்கும் போது அனுபவத்தை மட்டும் பார்ப்பதில்லை மற்ற ஆவணங்களையும் பார்ப்போம். RPT என்பது Revenue Patta Transfer என்பதாகும். பொதுவாக மேற்படி பட்டா மாற்றம் செய்யும் போது ஆவணங்களை முன்னிலைப்படுத்தி பரிசீலனை செய்து தான் மாற்றம் செய்யப்படும். நான் அளக்க சென்ற போது சர்வே எண் 191/32 ஆனது பட்டா இடம் 191/33 ஆனது பொது வழி. அந்த பொதுவழியில் ஒரு பகுதி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த பகுதிக்கு பின்புறத்தில் காலி இடம் இருந்தது. ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த விவரத்தை எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் அளவீடுகள் சொல்லப்படவில்லை. ஆக்கிரமிப்பு செய்தது பிரதிவாதி சந்தானமா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. சொத்தை அளவீடு செய்யும் போது யாரின் இடம் என்பதை எல்லாம் விசாரிக்கவில்லை புல வரைபடத்தை வைத்து அளவீடு செய்தோம், மற்ற விவரங்கள் பற்றி நீதிமன்ற ஆணையர் தான் விசாரணை செய்தார்.

புல வரைபடம் மீட்டர் கணக்கில் தான் கொடுக்கப்படும். ஒரு மீட்டரின் அளவு 3.28 அடி. பொது வழி என்பதால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதியின் அளவீகளை குறிப்பிட்டு நான் சொல்லவில்லை. சர்வே எண் 191/33 என்பதை கிராம கணக்கின் பொது வழியாக இருந்தாலும் கேட் போட்டு பட்டாதாரர்கள் தான் தங்களுக்கான வழியாக பயன்படுத்தி வந்தார்கள். மேற்படி பொது வழி பாதையில் ஆக்கிரமிப்பு உள்ளது. பொதுவாக பட்டாவை தன்னிச்சையாக வருவாய் துறையில் இருந்து கொடுப்பார்களா அல்லது மனுவின் அடிப்படையில் ஆவணங்களை பரிசீலனை செய்து கொடுக்கப்படுமா என்றால் பொதுவாக ஆவணங்களை பரிசீலனை செய்து தொடர்பு இருக்கும் பட்சத்தில் பட்டா

கொடுக்கப்படும், இலவச பட்டா மட்டும் வருவாய் துறையில் இருந்து அரசு உத்தரவின் பேரில் கொடுக்கப்படும்.

**<u>மறுவிசாரணை</u>**

சர்வே எண் 191/33 ஆனதற்கு பட்டா யார் பெயரிலும் இல்லை, அது பொது வழியாகும். அது அரசுக்கு சொந்தமான இடம் ஆகும்.

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.